2016 இன் 12 ஆம் இலக்கத்
தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் கீழ்

# மின் அஞ்சல் ஊடாக மேற்கொண்ட தகவல் கோரிக்கைக்கான பகிரங்க அதிகார சபைகளின் பிரதிபலிப்பு பற்றிய கற்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

2020 டிசம்பர்

## 2016 இன் 12 ஆம் இலக்கத்
## தகவல் அறியும் உரிமை பற்றிய
## சட்டத்தின் கீழ்

# மின் அஞ்சல் ஊடாக மேற்கொண்ட
# தகவல் கோரிக்கைக்கான பகிரங்க அதிகார
# சபைகளின் பிரதிபலிப்பு பற்றிய கற்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

2020 டிசம்பர்

**2016 இன் 12 ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் கீழ் மின் அஞ்சல் ஊடாக மேற்கொண்ட தகவல் கோரிக்கைக்கான பகிரங்க அதிகார சபைகளின் பிரதிபலிப்புப் பற்றிய கற்கை**

முதற் பதிப்பு : டிசம்பர் 2020

**ISBN : 978-955-4746-98-5**

பக்க வடிவமைப்பு : வாக்யா ரூ

வெளியீடு : மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

பெட்ரிக் நியூமான் மன்றத்துடன் (FNF) இணைந்து இப்பிரசுரம் வெளியிடப்படுகின்றது. சுதந்திரம் பொறுப்புடைமை என்பவற்றின் விழுமிய மதிப்பீட்டுடன் இம் மன்றத்தின் நடவடிக்கைகள் குவிமையப்படுத்தப்பட்டுள்ளன. புதிய கருத்திட்டங்களின் ஊடாக பெட்ரிக் நியூமான் மன்றம் (FNF) அனைத்து மக்களின் சுதந்திரம், மானுட மாண்பு என்பவற்றுடன் சமாதானமாக வாழக்கூடிய உலகை சிருஷ்டிப்பதற்கு பங்களிப்புச் செய்கின்றது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

| | |
|---|---|
| முகவரி | : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு–05 |
| தொலைபேசி | : +94112081384, +94112081385,+94112081386 |
| ஃபக்ஸ் | : +94112081388 |
| மின்னஞ்சல் | : info@cpalanka.org |
| இணையதளம் | : www.cpalanka.org |
| முகநூல் | : www.facebook.com/cpasl |
| ட்விட்டர் | : @cpasl |

# உள்ளடக்கம்

நிறைவேற்றுச் சாராம்சம் .......... 5

அறிமுகம் .......... 7

கற்கையின் நோக்கங்கள் .......... 9

கற்கை வழிமுறை .......... 9

ஆய்வின் எல்லைகள் .......... 9

ஆய்வின் மாதிரிகள் .......... 10

கற்கையின் அடிப்படைத் தரவுகளும் கண்டறியப்பட்ட விடயங்களும் .......... 12

பிரதேசச் செயலக அலுவலகங்களின் நிலைமை .......... 14

மாகாண சபைகளின் நிலைமை .......... 17

பொலிஸ் நிலையங்களின் நிலைமை .......... 19

வைத்தியசாலைகளின் நிலைமை .......... 22

கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்களின் நிலைமை .......... 24

மாகாணக் கல்வித் திணைக்களங்களின் நிலைமை .......... 26

இலங்கை மின்சார சபை அலுவலகங்களின் நிலைமை .......... 27

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகங்களின் நிலைமை .......... 29

ஆய்வின் கண்டுபிடிப்புக்கள் .......... 31

தகவல்களைக் கோரும் போதும் தகவல்களை வழங்கும் போதும் இலத்திரனியல் ஊடகத்தை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் பரிந்துரைகள் .......... 34

உசாத்துணை நூல்கள் .......... 36

இணைப்பு 01 ஆய்வுக்கான அணுகுமுறையின்போது பகிரங்க அதிகார சபைகளின் வகையீடு .......... 37

இணைப்பு 02 RTI 01 மாதிரிப் படிவம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) .......... 38

# நிறைவேற்றுச் சாராம்சம்

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டம், பிரஜைகளுக்கு உரிய தகவலுக்கான அணுகுமுறையை அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தியுள்ளது.

மரபு ரீதியான தகவல் கோரும் வழிமுறைக்கு அப்பால் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பகிரங்க அதிகாரசபைகளிடமிருந்து தகவல்களைக் கோருவதற்கான ஏற்பாடுகள் மேலே குறிப்பிட்ட சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மின் அஞ்சல் ஊடாக பிரஜைகள் தகவல்களைக் கோர முடியும். அதே சமயம் தகவல் கோரும் உரிமையை வலுவாக்கம் பெறச் செய்வதற்கு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதாகவும் அதனைக் கருத முடியும்.

- இக்கற்கையின் போது, 695 பகிரங்க அதிகார சபைகளிடமிருந்து மின்னஞ்சல் ஊடாக தகவல்கள் கோரப்பட்டன. அவற்றுள் 24% வீதமான பகிரங்க அதிகார சபைகள் கோரிக்கைகளுக்கு பிரதிபலிப்புகளைக் காட்டியிருந்ததோடு, பெரும்பான்மையான அதிகார சபைகள், சுமார் 76% சதவீதமானவை எதுவித பிரதிபலிப்புக்களையும் காட்டவில்லை.

- அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களில் 633 மின்னஞ்சல்களை (91% சதவீதமானவை) பகிரங்க அதிகாரசபைகள் வெற்றிகரமான முறையில் பெற்றுக்கொண்டுள்ளன. அதே சமயம் இக்கற்கையின் அனைத்துப் பகுப்பாய்வுகளும் வெற்றிகரமாக 633 மின்னஞ்சல் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகளை முன்வைத்துள்ளன.

- வெற்றிகரமாக அனுப்பப்பட்ட 633 மின்னஞ்சல்களின் எண்ணிக்கையில், சுமார் 165 மின்னஞ்சல் செய்திகளுக்கு குறித்துரைக்கப்பட்ட பகிரங்க அதிகார சபைகளினூடாக பிரதிபலிப்புக்கள் முன்வைக்கப்பட்டதோடு, அவை 26% சதவீதமானவை ஆகும். எதுவிதமான பிரதிபலிப்பையும் காட்டாத நிறுவனங்கள் 74% சதவீதமானவையாகும்.

- பிரதிபலிப்புக் காட்டிய 165 மின்னஞ்சல்களுக்கு எந்தெந்த நிறுவனங்கள் தகவல்களை வழங்கின எனவும், கிடைத்த செய்திகளுக்கு பிரதிபலிப்பைக் காட்டினாலும், எதிர்பார்க்கப்பட்ட தகவல்களை வழங்காத சுமார் 65 நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் சதவீதம் 39மூ ஆகும். இது ஒரு சாதகமான நிலைமை எனக் கூற முடியும். இலத்திரனியல் மூலம் தகவல்களை வழங்கும் சாத்தியக்கூறு மற்றும் விருப்பம் இதன் மூலம வெளிப்படுத்தப்படுகிறது.

- 337 பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களில் 307 வெற்றிகரமாக மேற்படி நிறுவனங்களை சென்றடைந்துள்ளன. அவற்றின் நூற்றுவீதம் 91% ஆகும். அவற்றுள் 118 நிறுவனங்கள் பிரதிபலிப்பைக் காட்டின. அது நூற்றுவீதத்தில் 38% வீதமாகும். இவற்றுள் எதிர்பார்த்த தகவல்களை வழங்கிய பிரதேசச் செயலகங்களின் எண்ணிக்கை 81 ஆகும். அதே சமயம், நூற்றுவீதத்தில் அது 69மூ ஆகும். அதே சமயம் அத்தகைய நிறுனங்களின் 62% வீதமானவை எதுவிதமான பிரதபலிப்பையும் காட்டவில்லை.

- இதற்கமைய மாகாண சபை அலுவலகங்களுக்கு வெற்றிகரமாக அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களின் எண்ணிக்கை 8 அவற்றில் 3க்கு பிரதிபலிப்புகள் காட்டப்பட்டன. 5 தகவல் கோரிக்கைகள் தொடர்பாக எதுவிதமான பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை.

- இவ்வாறாக அனுப்பப்பட்ட 229 மின்னஞ்சல்களில் 226 மின்னஞ்சல்கள் வெற்றிகரமாக மேற்படி பொலிஸ் நிலையங்களை சென்றடைந்தன. ஆனால், சுமார் 31 பொலிஸ் நிலையங்கள் பிரதிபலிப்பைக் காட்டியதோடு அது 14% சதவீதமானதாகும். அதே சமயம் 195 நிறுவனங்கள் எதுவித பிரதிபலிப்பையும் காட்டவில்லை. அது 86% சதவீதமாகும்.

- தகவல்களை எதிர்பார்த்து 31 வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் கோரிக்கைகளில் சுமார் 27 கோரிக்கைகள் வெற்றிகரமாக வைத்தியசாலைகளைச் சென்றடைந்தன. ஆனால், அவற்றில் 3 கோரிக்கைகளுக்கு மாத்திரமே பிரதிபலிப்புக்கள் காட்டப்பட்டன. ஏனைய 24 கோரிக்கைகளுக்கு எதுவிதமான பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை.

- மகாண கல்வித் திணைக்களங்களுக்கு 7 கோரிக்கைகள் தகவல் கோரி அனுப்பப்பட்டன. அவற்றில் உத்தியோகபூர்வமான மின்னஞ்சல் முகவரிகள் சரியாக செயற்பட்டதோடு அந்தக் கோரிக்கைகள் எவற்றிற்குமே இதுவரை எதுவிதமான பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை.

- இலங்கை மின்சார சபையின் 40 அலுவலகங்களுக்கு மின்னஞ்சல் கோரிக்கைகள் அனுப்பப்பட்டன. அவற்றில் 24 கோரிக்கைகள் வெற்றிகரமான மேற்படி மின்சார சபை அலுவலகங்களைச் சென்றடைந்துள்ளன. அவற்றுள் ஒரு நிறுவனம் மாத்திரம் பிரதிபலிப்புக் காட்டியதோடு பெரும்பான்மையான 23 நிறுவனங்கள் எதுவிதமான பிரதிபலிப்பையும் காட்டவில்லை.

# அறிமுகம்

2016 இன் 12 ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டம் பிரஜைகளுக்கான தகவல்களை அணுகுவதற்கு அரசியல் அமைப்பு ரீதியாக அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தி முறைசார் வகையில் செயற்படுத்தப்படும் வாய்ப்பை வழங்கியுள்ளது. அதே சமயம், தகவல் அறியும் சட்டத்தை இயற்றுவதற்கான அடிப்படைக் குறிக்கோள் பகிரங்க அதிகார சபைகளின் வெளிப்படைத் தன்மையையும் வகைப்பொறுப்பையும் பற்றிய கலாசாரத்தை போஷிப்பதற்கான நடவடிக்கை எடுத்தலாகும். இதன் மூலம் பிரஜைகளுக்கு நல்லாட்சி விடயத்தில் கூடுதலாகப் பங்கேற்கக் கூடிய மற்றும் நாட்டின் பொது வாழ்க்கையில் நேரடியாகப் பங்குபற்றக்கூடிய ஒரு சமூகத்தை மேம்படுத்துவதாகும். இதற்கமைய சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள பகிரங்க அதிகார சபைகளில் பிரஜைகள் தகவல்களைக் கோரக்கூடிய மேற்படி தகவல்களுக்கு ஏற்புடைய பகிரங்க அதிகார சபையின் பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் அவை இருப்பது அவசியமாகும். பிரஜைகள் தகவல்களைக் கோரும் போது அதனை எழுத்து மூலமோ அல்லது வாய்மொழி மூலமோ நிறைவேற்றுவதற்கு அவசியமான ஏற்பாடுகள் தகவல் அறியும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. RTI-01[1] படிவத்தை நிரப்பி ஒப்படைக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. இத்தகைய மரபு ரீதியான தகவல்களைக் கோரும் வழிமுறைக்கு அப்பால் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பகிரங்க அதிகார சபையிடமிருந்து தகவல்களைக் கோரக்கூடிய ஏற்பாடுகளும், தகவல்களை அறியும் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய மின்னஞ்சல் ஊடாகவும் தகவல்களைக் கோருவதற்கு பிரஜைகளுக்கு உரிமை உண்டு. இது தகவலறியும் உரிமையை வலுவாக்கம் செய்யும் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஒரு வழிமுறையாகும்.

மேற்படி சட்டத்தின் 24(6) வாசகத்திற்கு அமைய "எழுத்து மூலம்" என்பது மின்னஞ்சல் ஊடாக மேற்கொள்ளப்படும் எழுத்து மூலமான விடயங்களையும் உள்ளடக்கும், எனக் குறிப்பிடப்படுகிறது. அதே சமயம் 2017.02.03 ஆம் திகதிய 2004/66 இலக்கத்தைக்கொண்ட வர்த்தமானியின் 4(1) கட்டளைக்கு அமைய "அனைத்து பகிரங்க அதிகார சபைகளையும் தகவல் உத்தியோகத்தரால், தகவல்களை அணுகுவதற்காக கோரப்படும் பின்வரும் RTI 01 என்னும் படிவத்திற்கு அமைய விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்து கோரப்படும் தகவல்களை அடையாளம் காணக்கூடிய விபரங்கள் அடங்கிய ஒரு கடிதத்தை அல்லது மின்னஞ்சல் செய்தியை பெற்றுக்கொள்ள வேண்டும். ஓர் கோரிக்கையை முன்வைப்பதற்கு அவசியமான அனைத்து துணைத் தகவல்களும் குறிப்பிட்ட உத்தியோகத்தர் கட்டணம் இன்றி விண்ணப்பதாரிக்கு வழங்க வேண்டும். தகவல்களை வழங்குவதற்கு எவ்வகையிலேனும் கோரிக்கை விடுக்கும் பிரஜைக்கு RTI 01 படிவத்தை பூர்த்தி செய்வதற்கு நியாயமான ஒத்துழைப்பை தகவல் உத்தியோகத்தர் வழங்க வேண்டும்". அத்துடன் 4(2) கட்டளை குறிப்பிடுவதாவது "RTI 01 படிவத்திற்கு அமைய உத்தியோகபூர்வமாக விண்ணப்பப்படிவக் கட்டணமின்றி தகவல் கோரும் நபருக்கு அவை வழங்கப்படவேண்டும். அது இலத்திரனியல் ஊடாகவும் பெற்றுக்கொள்ளும் வசதியும் இருத்தல் வேண்டும்." அதே சமயம் 4(4) கட்டளையின் மூலம் " மின்னஞ்சல் ஊடாக தகவல்களை வழங்குமாறு சமர்ப்பிக்கப்படும் கோரிக்கையின்போது மேற்படி மின்னஞ்சல் தொடர்பாடலின் அச்சுப்பிரதியை பெற்றுக்கொண்டு விண்ணப்பப் படிவத்தில் இணைத்து, தகவல் உத்தியோகத்தரினால் அது நிரப்பப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" இதற்கமைய தகவல் அறியும் உரிமை பற்றிய ஆட்சியின் கீழ் மின்னஞ்சல் முறையைப் பயன்படுத்தி பகிரங்க அதிகார சபைகளில் இருந்து தகவல்களைக் கோருவதற்கு பிரஜைகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

1 **RTI 01** மாதிரிப் படிவங்களை (சிங்களம் /தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில்) இணைப்பு 02 இல் காணலாம்.

## கற்கையின் நோக்கங்கள்

கவல் அறியும் உரிமை பற்றிய ஆட்சியில் மின்னஞ்சல் முறையைப் பயன்படுத்தி பகிரங்க அதிகார சபைகளிடமிருந்து தகவல்களைப் பெற முடியும் என சட்ட ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டாலும், நடைமுறையில் அதுபற்றி பிரஜைகள் அறிவூட்டப்படாத நிலையை கடந்த காலத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நாடு பூராவும் ஏற்பாடு செய்த தகவல் அறியும் உரிமை பற்றிய கருத்தரங்குகள் மூலம் இவ்விடயம் அறிந்துகொள்ளப்பட்டது. அதே சமயம் மின்னஞ்சல் செய்தி முறைமைகள் மூலம் பகிரங்க அதிகார சபைகளுக்கு தகவல் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் போது அது தொடர்பாக அனேகமான எதிரிகளின் பிரதிபலிப்பும் கிடைக்கமாட்டாது என அறிய முடிந்தது. அதே சமயம் அறிந்துகொண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மின்னஞ்சல் செய்திகளுடாக மேற்கொள்ளப்படும் தகவல் கோரிக்கைகளுக்கான பகிரங்க அதிகார சபைகளையும் பிரதிபலிப்புக்களை பரிசீலனை செய்வது, இன்றைய கோவிட் 19 தொற்று நிலைமைகளின் கீழ் தகவல் கோரி சமர்ப்பணங்களைச் செய்வதும் தகவல்களை வழங்கும்போது இலத்திரனியல் ஊடகத்தை பயன்படுத்தும் முக்கியத்துவமும் வலியுறுத்தப்படுகின்றது. இந்த முன்னேற்றகரமான வெளிப்படுத்தல் தொடர்பாக வலியுறுத்துவது இதன் அடிப்படை நோக்கமாகும்.

## கற்கை வழிமுறை

இதன்போது 695 பகிரங்க அதிகார சபைகளின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகளுக்கு ஏற்புடைய தகவல் உத்தியோகத்தர் பதவிகளை வகிப்போரை விழித்து சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைப் பயன்படுத்தி மின்னஞ்சல் மூலம் 695 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த 695 மாதிரிகள் கொண்ட பகிரங்க அதிகார சபைகளுக்கான பிரதேசச் செயலகங்கள், மாகாண சபைகள், பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள், கமநல அபிவிருத்தி அலுவலகங்கள், மாகாண கல்வித் திணைக்களங்கள், இலங்கை மின்சார சபையின் அலுவலகங்கள் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகங்கள் உள்ளடக்கப்பட்டன. இப் பகிரங்க அதிகார சபைகளைப் பயன்படுத்தும் அடிப்படை நோக்கம், இவை பகிரங்க அதிகார சபைகளுக்கு உட்பட்ட பிரஜைகளின் அன்றாட வாழ்க்கையின் நேரடியான தொடர்புகளைப் பேணி, பிரஜைகள் தொடர்ந்து எதிர்நோக்கும் மேற்படி நிறுவனங்களுடன் நெருக்கமாக நடவடிக்கை மேற்கொள்வதாகும்.

## ஆய்வின் எல்லைகள்

இந்த ஆய்வு வெறுமனே பகிரங்க அதிகார சபைகளின் தகவல் அதிகாரிகளின் பிரதிபலிப்புக்களை பரிசீலனை செய்வதற்கு மாத்திரம் பயன்படுத்தப்படவில்லை. தகவல் உத்தியோகத்தர் என்பவர் இச்செயற்பாட்டின் முதலாவது

உத்தியோகத்தர் ஆவார். அதே சமயம், 14 நாட்கள் காலக்கெடுவின் பின்னர் மேன்முறையீட்டு உத்தியோகத்தரான பெயர் குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு மேன்முறையீடு செய்வது வரை இவ்வாய்வு விரிவாக்கப்படவில்லை. இதற்கமைய வெறுமனே இலத்திரனியல் மூலம் மேற்கொள்ளப்படும் தகவல் கோரிக்கைக்கான பகிரங்க அதிகார சபைகளின் தகவல் உத்தியோகத்தர்களின் பிரதிபலிப்புக்களை பரிசீலனை செய்து தகவல் உரிமை தொடர்பான முக்கிய முதலாவது உத்தியோகத்தரின் பிரதிபலிப்பு மீது மாத்திரமே இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

## ஆய்வின் மாதிரிகள்


பின்வரும் பகிரங்க அதிகார சபையின் தொகுதிகளுக்கான மின்னஞ்சல் செய்திகள் அனுப்பப்படுவது 2020 நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன. (அட்டவணை 1)

| | பகிரங்க அதிகார சபைகளின் வகைகள் | அனுப்பப்பட்ட மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கை | அனுப்பப்பட்ட பிரதிபலிப்புக்களின் எண்ணிக்கை | அனுப்பப்படாத பிரதிபலிப்புக்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பிரதேசச் செயலக அலுவலகங்கள் | 307 | 118 | 189 |
| 2 | மாகாண சபைகள் | 8 | 3 | 5 |
| 3 | பொலிஸ் நிலையங்கள் | 226 | 31 | 195 |
| 4 | வைத்தியசாலைகள் | 27 | 3 | 24 |
| 5 | கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்கள் | 25 | 8 | 17 |
| 6 | மாகாண கல்வித் திணைக்களங்கள் | 7 | 0 | 7 |
| 7 | இலங்கை மின்சார சபையின் அலுவலகங்கள் | 24 | 1 | 23 |
| 8 | நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகங்கள் | 9 | 1 | 8 |
| | | 633 | 165 | 468 |

அட்டவணை 1- கற்கையும் மாரியும் அடிப்படைத் தரவுகளும்

இந்த ஆய்வின் போது பயன்படுத்திய கற்கை வழிமுறைகளுக்கு அமைய தெரிவுசெய்யப்பட்ட மாதிரியான 695 பகிரங்க அதிகார சபைகளுக்கு அவற்றின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகளுக்கு ஏற்புடைய தகவல்களை கோரும் மின்னஞ்சல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றுள் 633 மின்னஞ்சல்கள் குறித்துரைக்கப்பட்ட பகிரங்க அதிகார சபைகளுக்கு வெற்றிகரமாக கிடைத்துள்ளன. 62 மின்னஞ்சல்கள் எதிர்பார்த்த மின்னஞ்சல் முகவரிகளை வெற்றிகரமாகச் சென்றடையவில்லை. பகிரங்க அதிகார சபைகளுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல்களின் 9% ஆகும். உரிய முறையில் சென்றடைந்த மின்னஞ்சல்களின் எண்ணிக்கை 633 ஆகும். அது விகிதாசாரத்தில் 91% ஆகும். (வரைபடம் 1)


### பகிரங்க அதிகார சபைகளுக்கு கிடைத்த / கிடைக்காத மின்னஞ்சல் செய்திகள் – ஒட்டுமொத்தமாக பகிரங்க அதிகார சபைகளின் எண்ணிக்கை – 695




வரைபடம் 1

இக்கற்கை தொடர்பாக பயன்படுத்தப்பட்ட ஒட்டுமொத்தமான மாதிரிகளும் அவை தெரிவுசெய்யப்பட்ட மாதிரியில் மேற்படி பகிரங்க அதிகார சபைகளுக்கு ஒன்லைன் வழிமுறையினூடாக அனுப்பி வைக்கப்பட்ட மின்னஞ்சல்களுக்கான பிரதிபலிப்பு தொடர்பான நிலைமை பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (வரைபடம் 2)

### வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல்களின் ஒட்டுமொத்த தகவல் கோரிக்கை தொடர்பான பிரதிபலிப்புகள்





வரைபடம் 2

# கற்கையின் அடிப்படைத் தரவுகளும் கண்டறியப்பட்ட விடயங்களும்

இதற்கமைய வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கை 633 இவற்றுள் 165 செய்திகளுக்கு ஏற்புடைய பகிரங்க அதிகார சபையின் மூலம் பிரதிபலிப்பு காட்டப்பட்டது. அது 26 சதவீதமாகும். அதேசமயம் நானூற்றி 68 மின்னஞ்சல் செய்திகளுக்கு எதுவித பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை. இது சதவீதத்தில் 74 சதவீதமாகும். (வரைபடம் - 3) இது தகவல் கோரிக்கைக்கு காட்டப்பட்ட பிரதிபலிப்பை எடுத்துக்காட்டும் வகையில் குறிப்பாக பகிரங்க அதிகார சபைகளின் பாதகமான பிரதிபலிப்பை எடுத்துக்காட்டுகிறது. இது இலத்திரனியல் மூலம் முன்வைக்கப்படும் பிரஜைகளின் கோரிக்கையை அதைரியப்படுத்தும் ஓர் நிலைமையாகும்.

**வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கையும்**
**பிரதிபலிப்பு காட்டப்பட்ட / பிரதிபலிப்பு காட்டப்படாத சதவீதமும்**





வரைபடம் 3

வெற்றிகரமாகக் கிடைக்கப்பெற்ற மின்னஞ்சல் செய்திகளில் ஏதாவது பிரதிபலிப்பைக் காட்டி கோரப்பட்ட தகவல்களை வழங்கிய எண்ணிக்கை 100 ஆகும் போது அதன் சதவீதம் 61 ஆக அமைந்தது. அதே சமயம் வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளிடையே ஏதாவது ஒரு வகையில் பிரதிபலிப்புக் காட்டப்பட்டாலும் எதிர்பார்த்த தகவல்களை வழங்காத நிறுவனங்களின் எண்ணிக்கை 65 ஆக குறிப்பிடப்படுகிறது. அது 39% சதவீதமாகும். (வரைபடம் 4)

இதற்கமைய பிரதிபலிப்புக்களைக் கோரி தகவல்களை வழங்கிய நூற்றுவீதம் பெரும்பான்மையை விட உயர்ந்த பெறுமதியை கொண்டுள்ளதோடு தகவல்களை வழங்காத அளவு குறைந்த மதிப்பைக் கொண்டுள்ளது. இது பிரதிபலிப்பைக் காட்டி தகவல்களை வழங்குவது தொடர்பாக ஒரு வகையில் சாதகமான நிலைமையைக் காட்டுகிறது. இது இலத்திரனியல் வழிமுறையில் தகவல்களை வழங்குவதற்குப் பகிரங்க அதிகார சபையின் சாத்தியப்பாடு மற்றும் விருப்பம் பிரதிபலிக்கப்படுகிறது.

**வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கையும்**
**பிரதிபலிப்பு காட்டப்பட்ட / பிரதிபலிப்பு காட்டப்படாத சதவீதம்**




வரைபடம் 4

# பிரதேசச் செயலக அலுவலகங்களின் நிலைமை


இவ்வாய்வின் போது 337 பிரதேசச் செயலகங்களுக்காக சிங்களம் அல்லது தமிழ் மூலம் பின்வரும் தகவல்கள் கோரப்பட்டன.

**தகவல்களைக் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட வினா**

“2020.01.01 திகதி முதல் 2020.10.01 திகதி வரை உங்கள் பிரதேசச் செயலகப் பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கை கிராம சேவை வட்டாரங்கள் மட்டத்தில் தனித்தனியாக வழங்குங்கள்”

இவ்வினாவை உள்ளடக்கி 337 மின்னஞ்சல் செய்திகள் அனுப்பப்பட்டன. இவற்றுள் 307 வெற்றிகரமாக மேற்படி அலுவலகங்களுக்குக் கிடைத்துள்ளன. அது சதவீதத்தில் 91 சதவீதமாகும். அதே சமயம் 30 மின்னஞ்சல் செய்திகள் வெற்றிகரமாக சென்றடையவில்லை. அது சதவீதத்தில் 09 ஆகும். (வரைபடம் 5)

**பிரதேசச் செயலகங்கள் வெற்றிகரமாகப் பெற்ற / பெறாத மின்னஞ்சல் செய்திகள் – பிரதேசச் செயலகங்களின் எண்ணிக்கை 337**





வரைபடம் 5

இதற்கமைய பிரதேசச் செயலகங்களின் உத்தியோக பூர்வ மின்னஞ்சல் முகவரிகள் செயற்பட்டமை மிக உச்ச விகிதாசாரத்தில் அமைந்திருந்தன, என்பது இதன்போது கண்டறியப்பட்டது.

இதற்கமைய வெற்றிகரமாக கிடைத்த செய்திகளின் எண்ணிக்கை 307 அவற்றில் 118 மின்னஞ்சல்களுக்கு பிரதிபலிப்பு காட்டப்பட்டது. அது 38 % ஆகும். அதே சமயம 189 மின்னஞ்சல்களுக்கு எதுவிதமான பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை. அது 62% ஆகும். (வரைபடம் 6)

இது தகவல் கோரிக்கைக்கான பிரதிபலிப்பு காட்டுவது தொடர்பான பிரதேசச் செயலகங்களில் சிற்சில நேரெதிரான தன்மையை வெளிப்படுத்தியது. அதே சமயம் அது தகவல் அறியும் உரிமை இலத்திரனியல் முறைப்படி மேற்கொள்வது தொடர்பாக பிரஜைகளை அதைரியப்படுத்துவதற்குக் காரணமான ஒரு நிலைமை ஆகும்.

## பிரதேசச் செயலகங்களுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளுக்கு பிரதிபலிப்பு காட்டிய / காட்டாத நூற்றுவீதம்





வரைபடம் 6

வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளில் ஏதோ ஒரு வகையில் பிரதிபலிப்புக் காட்டிய பிரதேசச் செயலகங்களின் எண்ணிக்கை 81 ஆகும். இது நூற்றுவீதத்தில் 69% ஆகும். அதே சமயம் வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளிடையே பிரதிபலிப்புக் காட்டினாலும் தகவல்களை வழங்காத எண்ணிக்கை 37 இது சதவீதத்தில் 31% (வரைபடம் 7)

இதன் போது குறிப்பிடவேண்டிய விசேட விடயம் உண்டு. 9 பிரதேசச் செயலகங்களுள் RTI-01 படிவத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட படிவத்தின் கீழ் தகவல்களைக் கோருதல். இதற்கான பிரதிபலிப்பைக்காட்டுமாறு அறிவிக்கப்பட்டது. இது பகிரங்க அதிகார சபைகளின் இலத்திரனியல் ஊடகம் மேற்கொண்ட கோரிக்கை தொடர்பாக பிரஜைகளை தைரியப்படுத்தும் வகையில் சுட்டிக்காட்டப்பட்ட ஏனைய பிரதேசச் செயலகங்களால் மிகச் சரளமான மின்னஞ்சல் கோரிக்கைக்கு தகவல்களை வழங்குதல் சில சமயம் பிரதேசச் செயலகத்தினால் RTI-01 படிவம் கட்டாயம் எனக் கருதப்பட்டது,

**பிரதேசச் செயலகங்களுடாக பிரதிபலிப்புக் காட்டிய மின்னஞ்சல் செய்திகளுடாக தகவல்களை வழங்கியமை / வழங்காமை**




வரைபடம் 7

# மாகாண சபைகளின் நிலைமை

தகவல் அறியும் உரிமை பற்றிய இலத்திரனியல் மாற்றத்தை பயன்படுத்தி பகிரங்க அதிகார சபைகளிடம் தகவல்களைக் கோருவதற்கு பிரஜைகளுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலைமை தொடர்பாக மேற்கொண்ட இக்கற்கையின் போது 09 மாகாண சபை அலுவலகங்களுக்கு தகவலைப்பெறும் அபிலாஷையுடன் சிங்கள மொழியில் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.


**தகவல்களைக் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட வினா**

"2020.01.01 திகதி முதல் 2020.10.01 திகதி வரை உங்கள் உங்கள் மாகாண சபை எல்லைக்குள் வீதி அபிவிருத்திக்காக செலவு செய்யப்பட்ட நிதி பற்றிய தகவல்களை வழங்குங்கள்"

இவ்வாறாக அனுப்பப்பட்ட 9 மின்னஞ்சல்களில் சுமார் 8 வெற்றிகரமான முறையில் மேற்படி மாகாண சபை அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அதே சமயம் ஒரு மின்னஞ்சல் செய்தி வெற்றிகரமாக போய்ச் சேரவில்லை. (வரைபடம் 8)

இதற்கமைய மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரி சரியாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பதை இக்கற்கையின் தரவுகளின் மூலம் தெளிவாகியது,

**மாகாண சபை அலுவலகங்களுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த /கிடைக்காத மின்னஞ்சல் செய்திகள்**
**மாகாண சபை அலுவலகங்களின் எண்ணிக்கை – 9**





வரைபடம் 8

இதற்கமைய மாகாண சபை அலுவலகங்களுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகள் 08 இவற்றுள் 3 மின்னஞ்சல்களுக்கு பிரதிபலிப்புக்கள் காட்டப்பட்டன. 5 மின்னஞ்சல்களுக்கு எதுவித பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை. (வரைபடம் 9)

**மாகாண சபைகள் அலுவலகங்களுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளில் பிரதிபலிப்புக் காட்டிய / பிரதிபலிப்புக் காட்டாத எண்ணிக்கை**

**மாகாண சபைகளின் எண்ணிக்கை – 8**




வரைபடம் 9

இது தகவல் கோரிக்கைக்கு பிரதிபலிப்புக் காட்டிய மாகாண சபை அலுவலகங்களின் குறித்துரைக்கப்பட்ட பாதகமான தன்மையை வெளிப்படுத்தும் அதே சமயம் ததகவல் உரிமை இலத்திரனியல் முறை மூலம் செயற்படுத்துவது பிரஜைகளை அதைரியப்படுத்துவதற்குக் காரணமான நிலைமையாகும்.

வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளிடையே எதுவிதமான பிரதிபலிப்பைக் காட்டினாலும் கோரப்பட்ட தகவல்களை எந்தவொரு மாகாண சபையும் வழங்காமை குறித்துரைக்கப்பட வேண்டிய மிகவும் நேர் எதிரான நிலைமையை எடுத்துக்காட்டுகிறது.

# பொலிஸ் நிலையங்களின் நிலைமை

தகவல் அறியும் உரிமை பற்றிய இலத்திரனியல் மார்க்கத்தைப் பயன்படுத்தி பகிரங்க அதிகார சபைகளிலிருந்து தகவல்களைக் கோருவதற்கு பிரஜைகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக மேற்கொண்ட இக்கற்கையின்போது 229 பொலிஸ் நிலையங்களூடாக பின்வரும் தகவல்களைக் கோரி சிங்களத்தில் அல்லது தமிழில் தகவல் கோரிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

**தகவல்களைக் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட வினா**

"2020.01.01 திகதி முதல் 2020.10.01 வரை உங்கள் பொலிஸ் அதிகாரப் பிரிவில் போதை வஸ்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்கள் பற்றிய தகவல்களை வழங்குங்கள்"

இவ்வாறாக அனுப்பப்பட்ட 229 மின்னஞ்சல் செய்திகளிடையே சுமார் 226 வெற்றிகரமாக மேற்படி பொலிஸ் நிலையங்களை அடைந்துள்ளன. அவற்றின் சதவீதம் 99% ஆகும். அதே சமயம் 3 மின்னஞ்சல் செய்திகள் வெற்றிகரமாக கிடைக்கவில்லை. இது சதவீதத்தில் 01 ஆகும்.

இதற்கமைய மிக உயர்ந்த சதவீதத்தில் பொலிஸ் நிலையங்களில் உத்தியோகபூர்வமான மின்னஞ்சல் முகவரிகள் செயற்படுவதை அறிய முடிகிறது.

**பொலிஸ் நிலையத்திற்கு வெற்றிகரமாகக் கிடைத்த / கிடைக்காத மின்னஞ்சல் செய்திகள்**
**ஒட்டுமொத்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை –229**





வரைபடம் 10

மேற்குறிப்பிட்ட நிலைமை இவ்வாறாக இருந்த போதிலும் வெற்றிகரமாகக் கிடைத்த 226 மின்னஞ்சல் செய்திகளில் 31 செய்திகளுக்கு மாத்திரமே போதியளவு பிரதிபலிப்புக் காட்டப்பட்டுள்ளது. அதே சமயம் அது 14 சதவீதமாகும். அதே சமயம் 195 எதுவிதமானப் பிரதிபலிப்பும் காட்டத் தவறியதோடு அது சதவீதத்தில் 86 சதவீதமாகும். (வரைபடம் 11)

## பொலிஸ் நிலையத்திற்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கையை பிரதிபலிப்புக் காட்டப்பட்ட – பிரதிபலிப்புக் காட்டப்படாத எண்ணிக்கை

## பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை – 226





வரைபடம் 11

இது தகவல் கோரிக்கைக்கான பிரதிபலிப்புக் காட்டல் தொடர்பாக பொலிஸ் நிலையங்களின் குறிப்பிடத்தக்க எதிர்மறையான நிலைமையை எடுத்துக்காட்டுவதோடு அது தகவல் உரிமை இலத்திரனியல் முறையை நடைமுறைப்படுத்துவதையிட்டு பிரஜைகளை தைரியப்படுத்தாத ஒரு நிலைமையாகும்.

வெற்றிகரமாக கிடைத்த மின்னஞ்சல் செய்திகளில் பிரதிபலிப்பைக் காட்டிய எண்ணிக்கை 8 ஆகும். (அது 26% ஆகும்) அதே சமயம் வெறறிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளுக்கிடையே பிரதிபலிப்பைக் காட்டினாலும் தகவல்களை வழங்காத பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 23 ஆகும். இதன் நூற்றுவீதம் 74% ஆகும். (வரைபடம் 12)

**பொலிஸ் நிலையங்களில் பிரதிபலிப்புக் காட்டப்பட்ட மின்னஞ்சல் செய்திகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட தகவல்கள் வழங்கியமை /வழங்கப்படாமை தொடர்பான நிலைமை**

**பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை 31**




வரைபடம் 12

# வைத்தியசாலைகளின் நிலைமை


தகவல்களுக்கான உரிமை பற்றிய வழிமுறையைப் பயன்படுத்தி பகிரங்கஅதிகாரசபைகளில் இருந்து தகவல்களைக்கோருவதற்கு பிரஜைகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்ட நிலையில் மேற்கொண்ட இக்கற்கையின் போது 31 வைத்தியசாலைகளில் இருந்து பின்வரும் தகவல்கல் சிங்கள மொழியில் கேட்கப்பட்டன.

**தகவல்களைக் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட வினா**

2020.01.01 திகதி முதல் 2020.10.01 வரை உங்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற / சிகிச்சை நிலையங்களில் பங்குகொண்ட சிறுநீரகம் பாதிக்கப்பட்ட, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையை தனித்தனியாக வழங்குங்கள்

இவ்வினாவைத் தொடுத்து 31 மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டன. அவற்றுள் 27 மின்னஞ்சல்கள் வெற்றிகரமாக மேற்படி வைத்தியசாலைகளைச் சென்றடைந்துள்ளன. இது சதவீதத்தில் 87 சதவீதம் ஆகும். அதே சமயம் 4 மின்னஞ்சல் செய்திகள் வெற்றிகரமாகப் போய்ச் சேரவில்லை. அது சதவீதத்தில் 13 ஆகும். (வரைபடம் 13) இதற்கமைய இந்தக் கற்கை தொடர்பாக தொடர்புபடுத்தப்பட்ட 31 வைத்தியசாலைகளின் நிலைமையைக் கருத்திற்கொண்டு பார்க்கையில் மேற்படி வைத்தியசாலைகளில் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகளில் தவறற்ற செயற்பாடு உயர்ந்த சதவீதத்தை கொண்டிருந்தது என்பது தரவுகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

**வைத்தியசாலைகளை வெற்றிகரமாக அடைந்த / வெற்றிகரமாக அடையாத மின்னஞ்சல்கள்**
**வைத்தியசாலைகளின் எண்ணிக்கை – 31**





வரைபடம் 13

இதற்கமைய வெற்றிகரமாகக் கிட்டிய மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கை 27 ஆகும். இதில் 3 மின்னஞ்சல்களுக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது, அது 11 சதவீதமாகும். அதே சமயம் 24 வைத்தியசாலைகள் எதுவிதமான பிரதிபலிப்பையும் காட்டத் தவறியுள்ளன. (இது 89 சதவீதமாகும்). (வரைபடம் 14)

இது தகவல் கோரிக்கைக்கு கிடைத்த பிரதிபலிப்பை காட்டுவது தொடர்பாக வைத்தியசாலைகளை ஓரளவு எதிர்மறையான தன்மையை எடுத்துக்காட்டுவதோடு தகவலுக்கான உரிமையை இலத்திரனியல் முறையில் சமர்ப்பிப்பதற்கு பிரஜைகளை அதைரியப்படுத்துவதற்கான ஒரு நிலைமையை சுட்டிக்காட்டுகிறது.

**வைத்தியசாலைகள் வெற்றிகரமாகப் பெற்ற மின்னஞ்சல் செய்திகளுக்கு பிரதிபலிப்புக் காட்டிய பிரதிபலிப்புக் காட்டாத எண்ணிக்கை.**

**வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 27**




வரைபடம் 14

வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளிடையே பிரதிபலிப்பைக் காட்டி கோரிய தகவல்களை வழங்கிய எண்ணிக்கை 2 ஆகும். அதே சமயம் வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளிடையே எத்தகைய பிரதிபலிப்புக் காட்டினாலும் தகவல்கள் வழங்கப்படாத ஒரு வைத்தியசாலை இருந்தது. (வரைபடம் 15)

**வைத்தியசாலைகள் மூலம் பிரதிபலிப்புக் காட்டிய மின்னஞ்சல் செய்திகளின் எதிர்பார்த்த தகவல்களை வழங்குதல் மற்றும் வழங்காமை தொடர்பான நிலைமைகள்**

**வைத்தியசாலைகளின் எண்ணிக்கை – 3**




வரைபடம் 15

# கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்களின் நிலைமை

தகவல் உரிமைகள் பற்றிய வழிமுறைகளைப் பயன்படுத்தி பகிரங்க அதிகார சபைகளின் தகவல்களைக் கோருவதற்கு பிரஜைகளுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலைமை தொடர்பாக மேற்கொண்ட இக் கற்கையின் போது கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்கள் 31 இன் மூலம் பின்வரும் தகவல்களைக் கோரி சிங்கள மொழியில் தகவல் கோரிக்கைக்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

**தகவல்களைக் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட வினா**


2020.01.01 திகதி முதல் 2020.10.01 வரை உங்கள் பிரதேசத்தில் எத்தனை பேருக்கு உர மானியம் வழங்கப்பட்டுள்ளது? அத்தகவல்களை மாதாந்தம் தனித்தனியாக வழங்குங்கள்

இவ்வாறாக அனுப்பப்பட்ட 31 மின்னஞ்சல் செய்திகளில் 25 செய்திகள் மாத்திரம் வெற்றிகரமாக கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்களுக்குக் கிடைத்துள்ளன. இது சதவீதத்தில் 81 ஆகும். அதே சமயம் 6 மின்னஞ்சல் செய்திகள் வெற்றிகரமாக கிடைக்கவில்லை. இது சதவீதத்தில் 19 சதவீதமாகும். (வரைபடம் 16)

இதற்கமைய மிக உயர்ந்த சதவீதமான கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் தபால் முகவரிகள் தவறின்றி செயற்பாட்டில் உள்ளன என்பதை அறிய முடிந்தது.

**கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகத்திற்கு வெற்றிகரமாக கிடைத்த / கிடைக்காத மின்னஞ்சல் செய்திகள்**

**கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்களின் எண்ணிக்கை –31**





வரைபடம் 16

இதற்கமைய வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கை 25 இவற்றுள் 8 மின்னஞ்சல்களுக்கு பிரதிபலிப்புக் காட்டப்பட்டது (அது 32 சதவீதமாகும்.) அதே சமயம் அவற்றுள் 17 எதுவிதமான பிரதிபலிப்பையும் காட்டவில்லை. இவை தோல்வி கண்டதோடு சதவீதத்தில் 68 ஆகும். (வரைபடம் 17)

**கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகத்திற்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகள் அவற்றுள் பிரதிபலிப்புக் காட்டிய மற்றும் பிரதிபலிப்பைக் காட்டாத எண்ணிக்கை**

**கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்களின் எண்ணிக்கை – 25**




வரைபடம் 17

இது தகவல் கோரிக்கைக்கு பிரதிபலிப்புக் காட்டுதல் தொடர்பான கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகத்தின் நேரெதிரான தன்மையை எடுத்துக்காட்டுவதோடு இது தகவல் அறியும் உரிமையை இலத்திரனியல் முறை மூலம் தொழிற்படுவது பற்றி பிரஜைகளை அதைரியப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக அமைந்துள்ளது.

வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளில் தகவலுக்கான பிரதிபலிப்புக் காட்டிய அனைத்து அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்ட சாதகமான நேர்மறையான நிலைமையைக் காட்டுவதோடு அது பாராட்டப்பட வேண்டும்.

# மாகாணக் கல்வித் திணைக்களங்களின் நிலைமை

தகவல் அறியும் உரிமை பற்றிய வழிமுறையைப் பயன்படுத்தி பகிரங்க அதிகார சபைகளில் இருந்து தகவல்களைக் கோருவதற்கு பிரஜைகளுக்கு அவகாசம் வழங்கியுள்ள நிலைமை பற்றி மேற்கொண்டு, இக்கற்கையின்போது 7 மாகாணக் கல்வித் திணைக்களங்கள் ஊடாகப் பின்வரும் தகவல்கள் சிங்கள மொழியில் தகவல் கோரும் படிவம் அனுப்பப்பட்டது.

**தகவல்களைக் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட வினா**


2020.01.01 திகதி முதல் 2020.10.01 திகதி வரை உங்கள் கல்வி வலையத்தில் இருந்த ஆசிரியர் வெற்றிடங்கள் எத்தனை ? புதிதாக ஆட் சேர்க்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ? இது பற்றிய தகவல்களை வழங்குங்கள்.

இவ்வாறு அனுப்பப்பட்ட 7 மின்னஞ்சல்களை வெற்றிகரமாக மேற்படி திணைக்களங்கள் பெற்றுள்ளன. இதற்கமைய உயர்மட்ட சதவீதத்தில் மாகாணக் கல்வித் திணைக்களங்கள் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகளை சரியான முறையில் செயற்படுத்துகின்றன என்பதை அறியக்கூடியதாக இருந்தது.

இதற்கமைய இவ்வாறாக வெற்றிகரமான முறையில் கிடைத்த மின்னஞ்சல்களின் எண்ணிக்கை 07. ஆனால் எதுவிதமான பிரதிபலிப்பும் காட்டப்படவில்லை. இது ஒரு நேரெதிரான நிலைமையை எடுத்துக்காட்டுவதோடு, நேரடியாகவே தகவல் அறியும் உரிமையைப் பாவிப்பதை அதைரியப்படுத்தும் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலைமையாக வலியுறுத்தவேண்டியுள்ளது. (வரைபடம் 18)

**மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகள் பிரதிபலிப்பு க் காட்டிய எண்ணிக்கை மற்றும் பிரதிபலிப்புக் காட்டாத எண்ணிக்கை**

**மாகாணக் கல்வித் திணைக்களங்களின் எண்ணிக்கை 07**




வரைபடம் 18

# இலங்கை மின்சார சபை அலுவலகங்களின் நிலைமை

தகவல் அறியும் உரிமை பற்றிய வழிமுறைகளைப் பயன்படுத்தி பகிரங்க அதிகார சபைகளின் தகவல்களைக் கோரும் உரிமை பிரஜைகளுக்கு வழங்கப்பட்ட நிலையில் இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது. இலங்கை மின்சார சபையின் 40 அலுவலகங்களில் பின்வரும் கோரிக்கை சிங்கள மொழியில் விண்ணப்பப் படிவங்களாக முன்வைக்கப்பட்டன.


**தகவல்களைக் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட வினா**

2020.01.01 திகதி முதல் 2020.10.01 திகதி வரை உங்கள் பிரதேசத்தில் எத்தனை நபர்களுக்கு புதிதாக மின்சாரம் வழங்கப்பட்டது ? இத்தகவல்களை மாதாந்த அடிப்படையில் தனித்தனியாக வழங்குங்கள்"

இவ்வாறாக இலங்கை மின்சார சபையின் 40 அலுவலகங்களுக்கு அனுப்பபட்ட மின்னஞ்சல் செய்திகளில் 24 நிறுவனங்கள் வெற்றிகரமான முறையில் மேற்படி செய்திகளைப் பெற்றுள்ளன. அதன் சதவீதம் 60. அதே சமயம் 16 மின்னஞ்சல் செய்திகள் வெற்றிகரமாக போய்ச் சேரவில்லை அது சதவீதத்தில் 40 ஆகும். (வரைபடம் 19)

**இலங்கை மின்சார சபையின் அலுவலகங்களுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த / கிடைக்காத மின்னஞ்சல் செய்திகள்.**

**இலங்கை மின்சார சபையின் அலுவலகங்களின் எண்ணிக்கை 40**





வரைபடம் 19

இதற்கமைய வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கை 24, ஒரு நிறுவனம் மாத்திரம் பிரதிபலிப்புக் காட்டியதோடு பெரும்பான்மையானவை 23 எதுவித பிரதிபலிப்பையும் காட்டவில்லை. (வரைபடம் 20)

## இலங்கை மின்சார சபை அலுவலகங்களுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகள் பிரதிபலிப்புக் காட்டிய மற்றும் பிரதிபலிப்புக் காட்டாத எண்ணிக்கை

## இலங்கை மின்சார சபையின் அலுவலகங்களின் எண்ணிக்கை 24




வரைபடம் 20

இது தகவல் கோரிக்கைக்கான பிரதிபலிப்புக் காட்டியது பற்றிய இலங்கை மின்சார சபை அலுவலகங்களில் இறுக்கமான நேரெதிரான தன்மையை எடுத்துக்காட்டுவதோடு இச்செயற்பாடு தகவல் அறியும் உரிமையை இலத்திரனியல் முறைப்படி மேற்கொள்வது பற்றி பிரஜைகளுக்கு அதைரியமூட்டும் வகையில் அமைந்துள்ளது.

வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளில் ஏதோ ஒரு வகையில் பிரதிபலித்து வேண்டுகோள் விடுத்த தகவல்களை இதுவரை காலம் வழங்காமை காணக்கூடியதாகவுள்ளது. இது நேரடியாகவே தகவல் உரிமையை பயன்படுத்துவதை நேரெதிரான தாக்கத்தை ஏற்படுத்தும் நிலைமை என வலியுறுத்திக் கூற முடியும்.

# நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகங்களின் நிலைமை

தகவல் அறியும் உரிமை பற்றிய வழிமுறைகளைப் பயன்படுத்தி பகிரங்க அதிகார சபைகளிடம் தகவல்களைக் கோருவதற்கு பிரஜைகளுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலைமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் போது நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 11 பிராந்திய அலுவலகங்களின் ஊடாக பின்வரும் தகவல்கள் சிங்கள மொழி மூலம் தகவலுக்கான படிவங்களில் அனுப்பி வைக்கப்பட்டன.


**தகவல்களைக் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட வினா**

2020.01.01 திகதி முதல் 2020.10.01 திகதி வரை உங்கள் பிரதேசத்தில் எத்தனை நபர்களுக்கு புதிதாக குழாய் நீர் வழங்கப்பட்டது ? இத்தகவல்களை மாதாந்த அடிப்படையில் தனித்தனியாக வழங்குங்கள்"

இவ்வாறாக அனுப்பப்பட்ட 11 மின்னஞ்சல் செய்திகளில் 09 மின்னஞ்சல்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைத்துள்ளன. அவற்றுள் 02 மின்னஞ்சல் செய்திகள் வெற்றிகரமாக அலுவலகங்களை அடையவில்லை. (வரைபடம் 21)

**நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பிராந்திய அலுவலகங்களுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த / வெற்றிகரமாகக் கிடைக்காத மின்னஞ்சல் செய்திகள்**

**நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை II**





வரைபடம் 21

இதற்கமைய பெரும்பான்மையான சதவீதம் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகங்களின் உத்தியோகபூர்வமான மின்னஞ்சல் முகவரிகள் சரியாக செயற்படுவதை எடுத்துக்காட்டின.

இதற்கமைய வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல் செய்திகளின் எண்ணிக்கை 09. இவற்றுள் ஒரு நிறுவனம் பிரதிபலித்ததோடு ஏனைய 08 அலுவலகங்கள் எதுவிதமான பிரதிபலிப்பையும் காட்டத் தவறின. (வரைபடம் 22)

**நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பிராந்திய அலுவலகங்களுக்கு வெற்றிகரமாகக் கிடைத்த மின்னஞ்சல்களில் பிரதிபலிப்புக் காட்டிய பிரதிபலிப்புக் காட்டாத எண்ணிக்கை**

**நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை – 9**




வரைபடம் 22

இதற்கமைய தகவல்களைக் கோருவதற்கு பிரதிபலிப்பு காட்டுவது தொடர்பான நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகங்கள் கடுமையான நேர் எதிரான சுபாவத்தைக் காட்டியுள்ளதோடு அது தகவலுக்கான உரிமை இலத்திரனியல் மார்க்கமாக மேற்கொள்வதற்கு பிரஜைகளுக்கு அதைரியமூட்டும் முறையில் அமைந்துள்ளது.

# ஆய்வின் கண்டுபிடிப்புக்கள்

**1. மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்பட்ட தகவல் கோரிக்கைக்கான பிரதிபலிப்புக் காட்டல் குறைந்த மட்டத்தில் நிலவியமை**

வெற்றிகரமாகக்கிடைத்த 633 மின்னஞ்சல்களில் 468 மின்னஞ்சல்களுக்கு எதுவிதமான பிரதிபலிப்பும் காட்டாமை ஒரு பாதகமான நிலைமை எனக் கருத வேண்டிய அதே சமயம் இதன்போது தாக்கம் செலுத்துகின்ற விடயங்களை ஆய்வு செய்ய வேண்டும். ஏனெனில் எதுவிதமாகவேனும் பிரதிபலிப்புக் காட்டாமையால் ஏற்புடைய வழிமுறையைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் பணியாற்றுவதற்கு பிரஜை ஏதோவொரு வகையில் அதைரியப்படுத்துவதற்கு காரணமாக அமையலாம்.

**2. வெற்றிகரமாகச் சென்றடையாத மின்னஞ்சல் செய்திகள்**

இவ்வாய்வின் போது அனுப்பப்பட்ட 695 மின்னஞ்சல் செய்திகளில் 62 வெற்றிகரமான முறையில் பகிரங்க அதிகார சபைகளின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகளைச் சென்றடையவில்லை. Bounced அல்லது Address not found என்ற நிலையில் அவை காணப்பட்டன இங்கு உரிய முறையில் செயற்பாட்டில் இருக்கும் மின்னஞ்சல் முகவரிகள் பயன்படுத்தாமை அல்லது குறைபாடு கொண்ட மின்னஞ்சல் முகவரிகள் குறிப்பிடப்பட்டுள்ளமை இதற்குக் காரணமாக அமையலாம். எவ்வாறாயினும் இதன் மூலம் மின்னஞ்சல் ஊடகத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக பிரஜைகளின் நம்பிக்கையில் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தலாம்.

**3. RTI 01 மாதிரிப் படிவத்தின் மூலம் மாத்திரம் கோரிக்கை விடுக்குமாறு வேண்டுதல்.**

மின்னஞ்சல் மாத்திரம் போதாதென சில பகிரங்க அதிகார சபைகள் குறிப்பிட்டன. RTI 01 பவடித்தை உரிய முறையில் பூர்த்தி செய்து அனுப்புமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இது ஒரு வகையில் பிரஜைகளின் தரப்பில் நியாயமற்றது எனக் கருதக் கூடும். RTI 01 படிவத்தை நிரப்பி அதனை ஸ்கேன் செய்து பகிரங்க அதிகார சபைக்கு அனுப்புவதற்கான வசதிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் என்ன செய்வது ? தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் RTI 01 படிவம் கட்டாயமாக கவனத்தில் எடுக்காத ஒரு பின்னணியில் ஒரு சில பகிரங்க அதிகார சபைகளால் RTI 01 படிவம் தமது பாவனையைக் கட்டாயமானதாகக் கருதுவது பிரஜைகளின் தகவல் உரிமையை முறையே செயற்படுத்துவது தொடர்பான புறக்கணிப்பிற்கு காரணமாகும் வகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதை இங்கு குறிப்பிட வேண்டும்.

## 4. மின்னஞ்சல் செய்திகள் மூலம் கோரப்பட்ட தகவல்களுக்கு பிரதிபலிப்பு வழங்குகையில் பகிரங்க அதிகார சபையிடம் ஒரே மாதிரியான தன்மை நிலவாமை

இதன் போது தகவல் உத்தியோகத்தரை விழித்து சரளமாக அனுப்பப்பட்ட மின்னஞ்சல் செய்திகளுக்காக ஒரு சில பகிரங்க அதிகார சபைகள் குறித்துரைக்கப்பட்ட வகையில் பிரதிபலிப்பைக் காட்டுதல் மற்றும் தகவல்களை வழங்கியமை ஒரு சில பகிரங்க அதிகார சபைகள் RTI 01 படிவத்தின் மூலம் மீண்டும் தகவல்களைக் கோரிய சந்தர்ப்பங்களில் மின்னஞ்சலுக்கான பிரதிபலிப்பைக் காட்டுதல் தொடர்பாக ஓர் ஒருமைப்பாடு நிலவவில்லை. இதற்காக ஏற்புடைய வழிமுறை பற்றி சரியான புரிதல் இல்லாமை காரணமாக உத்தியோகத்தர்களின் மனப்பாங்குகளும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்

## 5. தகவல்களைக் கோருவதற்கான காரணங்களை விசாரித்தல்

தகவல் அறியும் சட்டத்திற்கு அமைய குறிப்பிட்ட தகவல்களைக் கோருவதற்கான காரணங்களை விளக்குவதற்கு பிரஜை கடப்பாடு கொண்டிருக்கவில்லை. ஆனால், விசேடமாக பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட தகவல் கோரிக்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை கோருவதற்கான காரணங்கள் கேள்விக்கு உட்படுத்தப்பட்டன. இது ஏற்புடைய செயற்பாடு பற்றி தகவல் உத்தியோகத்தர்கள் சரியாக அறிந்திருக்காத காரணத்தினால் ஏற்பட்ட நிலைமை ஆகும்.

## 6. அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை

ஏற்புடைய மின்னஞ்சல் செய்திகளை தமது உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகளுக்குப் பொருத்தமான பகிரங்க அதிகார சபைகளுக்கு அனுப்பப்பட்ட அதே சமயம் இதன்போது தகவல்களைக் கோரிய நபரின் பெயர் குறிப்பிடப்பட்டது. பொலிஸ் நிலையங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மின்னஞ்சல்களுக்கு கிடைத்த பிரதிபலிப்பு ஓரளவு இறுக்கமான தன்மையைக் கொண்டதாக இருந்தது. இதன்போது பொலிஸ் நிலைய அதிபருக்கு ஒரு கடிதத்தின் மூலம் தகவல் கோரி அனுப்புமாறு கேட்கப்பட்டது. அதே சமயம் தகவல் கோருபவரின் பெயரையும் உத்தியோக முத்திரையையும் பதிவுசெய்து தகவல்களைக் கோருமாறு கேட்கப்பட்டது. அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கு தகவல் கோருபவரை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு கோரிய சந்தர்ப்பங்களும் உண்டு. இத்தகைய பிரதிபலிப்புக்களின் ஊடாக பிரஜைகள் அதைரியப்படுத்தப்பட்டதோடு தகவல் அறியும் உரிமையை பயன்படுத்துவது தொடர்பாக கட்டாயமாக ஒரு புறக்கணிப்பு நிலையே காணப்பட்டது.

## 7. ஏற்புடைய பகிரங்க அதிகார சபை இல்லாவிடின் உரிய பகிரங்க சபையிடம் இருந்து தகவல்களைக் கோருமாறு அனுப்புதல்.

ஏற்புடைய தகவல் கோரிக்கை உரிய பகிரங்க அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பாடாத பட்சத்தில், மேற்படி பகிரங்க அதிகார சபையினால் ஏற்புடைய பகிரங்க அதிகார சபையின் தகவல்களை அறிந்திருப்பின் மேற்படி தகவல்களைக் கோருதல் குறிப்பிட்ட தகவல்களுக்கு உரித்தான பகிரங்க அதிகார சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதன்போது மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தகவல் கோரிக்கை தொடர்பான தகவல்கள் அச்சபையிடம் இல்லை என்றும் ஏற்புடைய பகிரங்க அதிகார சபையிடம் அவை உள்ளனவென்றும் குறிப்பிட்டு எமக்கு அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மேற்படி சந்தர்ப்பத்தில் அதாவது 4(6) ஒழுங்குவிதிக்கமைய அது பகிரங்க அதிகார சபை மேற்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டிய பின்னர் அவர்களால், அது ஏற்புடைய உரிய பகிரங்க அதிகார சபைக்கு

அனுப்பப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இதன்போது வெளியிடப்பட்ட விடயங்கள் தகவல் உத்தியோகத்தருக்கு மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் செயற்படுவது தொடர்பான அறிவு குறைந்து காணப்பட்டது.

**8. முன்னேற்றகரமான வெளிப்படுத்துகை**

நாம் சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒரு தகவல் கோரிக்கையை சமர்ப்பித்தபோது, அதற்குறிய தகவல்கள் உரிய இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் குறிப்பிட்டனர். அது ஒரு முன்னேற்றகரமான வெளிப்படுத்துகையாகும் சிற்சில விடயங்கள் தொடர்பாக அமுலாக்கப்படும் விடயம் என்பதையும் சிறந்த முறையில் புரிந்துகொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் நாம் கோரிய பல தகவல்கள் இவ்வாறாக முன்னேற்றகரமான வெளிப்படுத்துதலின் கீழ் அமைய வேண்டும் என குறிப்பிடுதல் வேண்டும்.

**9. குறித்துரைக்கப்பட்ட படிவங்களை தகவல் உத்தியோகத்தர்கள் பயன்படுத்தாமை**

RTI 01-02, RTI 04, RTI 05 ஆகிய படிவங்களின் மாதிரிகள் மூலம் பிரதிபலித்தல் அல்லது அச்சூழமைவை உள்ளடக்கிய முறையைப் பிரதிபலிப்பதற்கு ஒரு சில பகிரங்க அதிகார சபைகள் நடவடிக்கை எடுத்தாலும் அனேகமான பகிரங்க அதிகார சபைகள் அதனைக் கவனத்திற்கொள்ளாது உள்ளன. இதற்கமைய மேற்படி படிவம் பயன்படுத்தப்படுகையில் அதன் முக்கியத்துவம் பற்றியும் அதன் மூலம் வெளிப்படுத்த முயற்சிக்கும் பொருள் பற்றியும் தகவல் உத்தியோகத்தர்களுக்கு சரியான புரிதல் இல்லை என காணக்கூடியதாகவுள்ளது.

**10. பகிரங்க அதிகார சபைகளின் தகவல் உத்தியோகத்தர்கள் இலத்திரனியல் உத்தியோகபூர்வ முகவரிகளை கண்டுபிடிப்பதன் பேரில் எதிர்நோக்கும் கஷ்டங்கள்**

இது நாம் எதிர்நோக்கிய ஓர் நெருக்கடியாக அமைந்தது. ஆனால், கடும் முயற்சியுடன் தேடியபோது கண்டுபிடிக்க முடிந்தது. எவ்வாறாயினும் இந்த உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிகள் மிகவும் இலகுவாக பிரஜைகள் பெறக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். www.rti.gov.lk இணைய தளத்தில் கூட தகவல் உத்தியோகத்தர்களின் தகவல்கள் தவறற்றவை என அவதானிப்புகளின் போது வெளிப்பட்டது. அவற்றில் பூர்த்தியற்ற தகவல்கள் இருப்பதும் கவலைக்குரிய விடயமாகும். எவ்வாறாயினும் இத்தகவல்கள் முன்னேற்றகரமான வெளிப்படுத்துகையின் கீழ் இலகுவில் அடையக்கூடிய தகவல் உரிமைப் பயன்பாட்டின் போது கைவிடப்பட முடியாத தேவையாக வலியுறுத்த வேண்டும்.

**11. இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் தகவல்களைக் கோரும் போது தகவல்கள் வழங்குகையில் கட்டணங்களை அறவிடுதல்.**

குறித்துரைக்கப்பட்ட பகிரங்க அதிகார சபைகளினால் இலத்திரனியல் ஊடகங்கள் எதுவித பணத்தையும் அறவிடாமல் தகவல்களை வழங்கினாலும், ஒரு சில பகிரங்க அதிகார சபைகள் அதற்கான கட்டணங்களைக் கோரிய சந்தர்ப்பங்களையும் காண முடிகின்றது. மின்னஞ்சல் ஊடாக வழங்கப்படும் தகவல்களுக்கான கட்டணம் அறவிடாத பின்னணியில் இது ஒரு வகையில் வழிமுறை பற்றிய அறியாமை ஆகும்.

# தகவல்களைக் கோரும் போதும் தகவல்களை வழங்கும் போதும் இலத்திரனியல் ஊடகத்தை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் பரிந்துரைகள்

**1. சகல பகிரங்க அதிகார சபைகளும் மின்னஞ்சல் முகவரிகளை இலகுவில் பெறக்கூடிய வகையில் இணைய தளங்களில் பதிவு செய்தல்**

இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் தகவல்களை பெறும் உரிமையை பயன்படுத்தும் போது அதன் அடிப்படை நடவடிக்கையாக அத்தியாவசியப்படும் ஏனைய பகிரங்க அதிகார சபைகளையும் தொடர்புபடுத்தி தகவல்களை வழங்கக்கூடிய முன்னேற்றகரமான வெளியீடுகள் இருப்பதை வலுவூட்ட வேண்டும்.

**2. தகவல் அறியும் உரிமையை இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்துவது பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.**

அனேகமான பிரஜைகள் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்தி தகவல்களைக் கோருவது பற்றி அறியாமல் இருக்கின்றனர். இது பற்றிய பரந்துபட்ட விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சமூகக் கலந்துரையாடலை ஆரம்பிப்பதன் மூலம் பிரஜைகளுக்கு இது பற்றி முறையாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.

**3. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைகளில் தகவலறியும் உரிமையை முறைசார் வகையில் பயன்படுத்துவதற்குத் தகுதியான மாற்றீடாக online முறைமூலம் தகவல்களைக் கோருவது மற்றும் அவற்றிற்கான பிரதிபலிப்பை வழங்கும் போக்கை மேலும் வலுவூட்டுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.**

தற்போது நிலவும் கொவிட் தொற்றுநோய் நிலைமையை ஒட்டுமொத்த மக்களைப்போலவே அரச துறையும் சங்கடங்களை எதிர்நோக்கும் பின்னணியில் இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாகத் தகவல்களைக் கோருவதும் அவற்றிற்கான பிரதிபலிப்பைக் காட்டுவதையும் ஊக்குவிப்பதன் மூலம் தகவலுக்கான உரிமையை முறைசார் வகையில் செயற்படுத்தப்பட முடியும். ஏனெனில், இலத்திரனியல் ஊடகம் இதற்காக பயன்படுத்துவதன் ஊடாக சமூக இடைவெளியை பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆவணங்களில் - கடதாசிகளில் கொரோனா வைரஸ் பதிந்து தொற்றக்கூடிய ஆபத்தை தடுக்க வேண்டியும் உள்ளது. எனவே தற்போதைய நிலைமையில் இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பது வெற்றிகரமான மாற்றுத் திட்டம் எனக் குறிப்பிட வேண்டும்.

## 4. வன் பிரதிக்காக செலவு செய்யும் பணத்தை மிச்சப்படுத்த முடியும்

இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்துவதன் மூலம் தெட்டத்தெளிவாக வன் பிரதிக்காக செலவிடப்படும் நிதியை அனேகமாக மிச்சப்படுத்த முடியும். இதன் மூலம் குறித்துரைக்கப்பட்ட தகவல்கள் இலத்திரனியல் ஊடகங்களில் களஞ்சியப்படுத்துவதும் அது இலத்திரனியல் ஊடாக வழங்குவதும் எதுவித செலவும் இன்றி அரச துறை மூலம் பிரஜைகளுக்கு தகவல்களை வழங்க முடியும். அதே சமயத்தில் பிரஜைகளும் தகவலுக்கான உரிமையை அனுபவிக்கவும் முடியும்.

## 5. இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு பற்றி புதிய மார்க்கம் உருவாகுதல்

பொதுவாக இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதும் தொழில்நுட்ப ரீதியாக அபிவிருத்தியடைந்த நிலையை அடையக்கூடிய அதே சமயம் இறுதியாக அரச உத்தியோகத்தரைப் போலவே பிரஜையும் தகவல் தொழில்நுட்பத்தை தமது அன்றாட வாழ்வில் வெற்றிகரமாகப் பயன்படுத்தவும் அதனூடாக அபிவிருத்தி இலக்கை படிப்படியாக அடையவும் முடியும்.

## 6. தகவல்களுக்கான உரிமை பற்றிய ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும் 13வது ஒழுங்கு விதியை திருத்தியமைத்தல் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தகவலுக்கான உரிமை பற்றிய ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும் போது வன் பிரதிகளை அனுப்புவது கட்டாயமாகும். இது தொடர்பாகவும் இலத்திரனியல் ஊடகத்தை பயன்படுத்துதல் பற்றி பாதகமான ஒரு அணுகுமுறையே இருந்து வருகிறது. எனவே, தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்யும் போதும் இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் செயற்படுவதற்கு ஏற்ற வகையில் மேற்படி ஒழுங்குவிதி திருத்தப்பட வேண்டும்.

# உசாத்துணை நூல்கள்

2016 இன் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமை பற்றிய சட்டம்

**http://www.rticommission.lk/web/images/pdf/act/rti-act-ta-13122018.pdf**

# இணைப்பு 01

ஆய்வுக்கான அணுகுமுறையின்போது பகிரங்க அதிகார சபைகளின் வகையீடு

| | |
|---|---|
| 1 | பிரதேசச் செயலகங்கள் |
| 2 | மாகாண சபைகள் |
| 3 | பொலிஸ் நிலையங்கள் |
| 4 | வைத்தியசாலைகள் |
| 5 | கமத்தொழில் அபிவிருத்தி அலுவலகங்கள் |
| 6 | மாகாணக் கல்வித் திணைக்களங்கள் |
| 7 | இலங்கை மின்சார சபை அலுவலகங்கள் |
| 8 | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகங்கள் |

**RTI 01**

**තොරතුරු ලබා ගැනීමේ අයදුම් පත්‍රය**

**මෙම අයදුම්පත්‍රය පිරවීම අතවශ්‍ය නොවේ.මෙය පැහැදිලිව තොරතුරු ඉල්ලීමට ඔබගේ පහසුව සඳහා පිළියෙල කර ඇත.අතවශ්‍ය තොරතුරු පැහැදිලිව සඳහන් කරමින් ලිපියක්, විද්‍යුත් තැපැල් පණිවිඩයක් හෝ වාචික ඉල්ලීමක් ඔබට කල හැක.**

**තොරතුරු නිලධාරි,**

**…………………………………………………….**

01. **අයදුම් කරුගේ නම** ………………………………………………………………

02. **ලිපිනය** ………………………………………………………………

03. **දුරකථන අංකය (තිබේනම්)** ………………………………………………………………

04. **විද්‍යුත් ලිපිනය(තිබේනම්)** ………………………………………………………………

05. **ඉල්ලා සිටින තොරතුරු පිළිබඳ විස්තර,**
    (ඉඩමදි නම් වෙනම ලියාඅමුණන්න)
    - I. **අදාළ ආයතනය** ………………………………………………………………
    - II. **ඉල්ලා සිටින තොරතුරු** ………………………………………………………………
    - III. තොරතුරුවලටඅදාල කාල පරිච්ඡේදය ………………………………………………………………

06. **තොරතුරු ලබා ගැනීමට අපේක්ෂා කරන ආකාරය (අනවශ්‍ය කොටස් කපාහරින්න)** ………………………………………………………………

    (අ)අදාළවැඩ, ලේඛන,වාර්තා අධීක්ෂණය කිරීම සඳහා,

    (ආ)අදාළ**ලේඛන** හෝ වාර්තාවලින් සටහන්, උද්ධෘත හෝ සහතික පිටපත් ලබාගැනීම,

    (ඇ)අදාළ ද්‍රව්‍යයන්ගෙ'සහතික කළ නිදර්ශන ලබා ගැනීම,

    (ඈ)එම තොරතුරු පරිගණකයක හෝ වෙනත් යම් උපාංගයක ගබඩාකර ඇති අවස්ථාවකදී, ඩිස්කට්, ප්ලොපි, පටි, දෘෂ්‍ය කැසට්පට හෝ වෙනත් යම් විද්‍යුත් **ක්‍ර**මයකින් හෝ මුද්‍රිත පිටපත් වශයෙන් තොරතුරු ලබා ගැනීම

07. **ඉල්ලුම්කරු වඩාත් කැමති භාෂා මාධ්‍යය** ………………………………………………………………

08. ඉල්ලා සිටිනු ලබන තොරතුරු ජීවිතය සහ පුද්ගලිකත්වය ආරක්ෂාකර ගැනීමට අදාල බවට විශ්වාස කරන්නේනම් එය තහවුරු කරන කරුණු ………………………………………………………………

09. වෙනත් විස්තර ………………………………………………………………

10. **පහත දැක්වෙන ලියවිලි පිටපත් අමුණා ඇත.(තිබේ නම් පමණි)**
    - I. ………………………………………………………………………………………
    - II. ………………………………………………………………………………………
    - III. ………………………………………………………………………………………

11. **ඔබ ශ්‍රී ලාංකික පුරවසියෙක්ද?** **ඔව් / නැත**

………………………………………………

**RTI 01**

தகவலுக்கான கோரிக்கையை மேற்கொள்வதற்கு இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்தல் ஒரு கட்டாயமான தேவைப்பாடு அல்ல என்பதையும் கோரப்பட்ட தகவல்களை அடையாளம் காண்பதற்கு அவசியமான தகவல்களுடன் ஏதேனும் எழுத்திலான கடிதம், மின்னஞ்சல் அல்லது வாய்மொழி மூலமான கோரிக்கை போதுமானது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

**தகவல்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்**

தகவல் அலுவலர்,

**01.** கோரிக்கையாளரின் பெயர் - ......................................................

**02.** முகவரி – .................................

**03.** தொலைபேசி இல. (ஏதேனும் இருப்பின்) -..............................

**04.** மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) - ....................

**05.** கோரப்படும் தகவல்கள் பற்றிய விபரங்கள்(போதிய இடம் காணப்படாவிடில் வேறு தாளில் இணைக்கவும்)

I. குறித்த பகிரங்க அதிகாரசபை ....................................

II. கோரப்படும் தகவல்கள் ..........................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

III. தகவல் கோரப்படும் குறித்த காலப்பகுதி (பொருத்தமாயின்) .................

**06.** தகவல் கோரப்படும் விதம்(தேவையற்றதை வெட்டிவிடவும்)–

i. சம்பந்தப்பட்ட வேலையை, ஆவணங்களை, பதிவுகளைப் பரிசோதித்தல்

ii. ஆவணங்கள் அல்லது பதிவுகளிலிருந்து குறிப்பெழுதுதல், பிரித்தெடுத்தல் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்

iii. பொருட்களின் சான்றுப்படுத்தப்பட்ட மாதிரிகளைப் பெறுதல்

iv. அத்தகைய தகவல் ஒரு கணனியில் அல்லது ஏதேனும் வேறு சாதனத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பின், தகவலைப் பெறுவது CD/DVD/ஊடக களஞ்சியம் / பதிவு நாடாக்கள் / வீடியோ கெசற்றுகள் / ஏதேனும் வேறு இலத்திரனியல் வடிவம் /அச்சுப் பிரதிகள்

**07.** வேண்டுகோளை மேற்கொள்பவர் தகவலைப் பெற விரும்பும் மொழி -............................

**08.** கோரப்படும் தகவல் பிரஜை ஒருவரின் வாழ்க்கை அல்லது சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா? (ஆம்/இல்லை)

ஆம் எனில், நம்பிக்கைக்கான காரணத்தைத் தருக. -

.................................................................................................................

..........................................................................................................................................................

**09.** வேறு ஏதேனும் விபரங்கள்- .........................................................

**10.** சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன (ஏதேனும் இருப்பின்)

I. ................................

II. .................................

III. .................................

**11.** கோரிக்யையாளர் ஓர் இலங்கைப் பிரஜையா? (ஆம்/இல்லை)

திகதி: -

ஒப்பம்:-

**RTI 01**

Note that completion of this Form is not a compulsory requirement to make a request for information and that any written letter, e-mail or a verbal request with the essential information to identify the requested information is sufficient.

**Application to receive Information**

Information Officer,

01. Name of Requestor - ……………………………………………..
02. Address – ……………………………
03. Contact No. (if any) -………………………….
04. Email Address (if any) - ………………..
05. Details about Information requested
    I. Specific Public Authority ……………………………….
    II. Information requested

       ……………………………………………………………………………………

       ……..

    ………………………………………………………………………………………… ……………………………………………
    ………………………………………………………………………………………… ……………………………………………
    ………………………………………………………………………………………… ……………………………………………
    III. Specific period information is requested (if applicable)………………
06. Manner in which information is requested–

    i. inspect relevant work, documents, records
    ii. Take notes, extracts or certified copies of documents or records
    iii. Take certified samples of material
    iv. Obtain information in the form of CD/DVD/storage media/tapes/video cassettes/ any other electronic mode/ printouts where such information is stored in a computer or in any other device.
07. Language in which requestor prefers access -……………………….
08. Does the information request concern the life and personal liberty of a citizen? (Yes/No)

    If Yes, give reason for belief -

    …………………………………………………………………………………………

    ………………………………………………………………………………………… …………………………………………………
09. Any other details- ………………………………………………….
10. Relevant documents attached (If any)

    I. ……………………………
    II. …………………………….
    III. …………………………….
11. Is the requestor a citizen of Sri Lanka? (Yes/No)

Date: -

තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම සම්බන්ධයෙන් ඔබට අවශ්‍ය ඕනෑම තොරතුරක් පිළිබඳව සහය වීමට අප සූදානම්!

ක්ෂණික ඇමතුම්

## තොරතුරු සහය මධ්‍යස්ථානය

**011-30 30 463**

**(සතියේ දිනයන්හි පෙ.ව. 9.00 සිට ප.ව. 5.00 දක්වා)**




**தகவல் அறியும் உரிமை பற்றி உங்களுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் தொடர்பாகவும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாங்கள் தயார் !**

உடனடித் தொடர்புகளுக்கு

## தகவலுக்கான உதவிப் பணியகம்

**011-30 30 463**

**(வாரநாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணி வரை)**


ISBN 978-955-4746-98-5